NISSUM
20.04.85

# புதிய பாதை

PLOT — PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM

காதம் 3 | மார்ச் 1985 | அன்பளிப்பு 2. 00 | சுவடு 2

## இனப் பிரச்சனையில் ஜே. ஆரின் புதிய அணுகுமுறை!

**தமிழீழப் பிரச்சனைக்கு இராணுவம் மூலம் தீர்வு காண்போம் என ஒரு கணமும் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என இன்னொரு கணமும் மாறிமாறி கூறி வரும் ஜே. ஆர். ஜெயவர்தனா அண்மையில் தமிழீழ மக்களின் பிரச்சனைக்குத் தீர்வுகாண ஒரு புதிய அணுகுமுறையை அறிவித்திருந்தார்.**

தமிழ் மக்கள் தமக்கென் ஒரு பாரம்பரிய பிரதேசத்தை-தமிழீழத்தைக் கொண்டிருப்பதனாலேயே ஒரு வலிமை மிக்க தேசிய இனமாக எழுற்சி பெற்றுள்ளனர். இதன் காரணமாகவே இன ஒடுக்குதல்களுக்குச் சரணாகதி அடையாமல் அவர்கள் தேசிய இனவிடுதலைக்கு போராடக் கூடியதாக உள்ளது. இதனை உணர்ந்துள்ள எதிரி அரசு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்களைக் குடியேற்றவும் அங்கே தமிழர்களின் எண்ணிக்கையை குறைத்து விடவும் சதி செய்கிறது. இது நடைபெற அனுமதித்தோமானால் தமிழர் தமக்கென ஒரு பாரம்பரியப் பிரதேசம் இருப்பதாகக் சோரமுடியாது. அண்மையில், இலங்கைத் தீவு சிங்களவர்களுடையது, எனவே சிங்கள மக்கள் இலங்கையின் எல்லாப் பக்கங்களிலும் செறிந்து வாழ வேண்டும் என ஜே. ஆர். ஜெயவர்த்தனா புதிய கோசம் ஒன்றைக் கிளப்பியிருக்கிறார். இதுவே அவரின் புதிய அணுகுமுறை. அதன் அடிப்படையில் முதல் கட்ட வேலையாக 30,000 சிங்களவர் குடும்பங்களை உடனடியாக யாழ் குடா நாட்டில் குடியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இப்புதிய அணுகுமுறையின் பிரகாரம் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனத்திற்குரிய அடிப்படை (NATION) குணாம்சத்தைப் பொதுப் பிரதேசத்தை இழந்து விடுவார்கள். அவ்விதத்தில் தேசிய இனத்திற்கான சுயநிர்ணய உரிமைகளையும், பிரிந்து செல்லும் உரிமைகளையும் இழந்து விடுவார்கள். நாளடைவில் தேசிய இனத்திற்கான அடிப்படைக் குணாம்சங்களான பாரம்பரிய நிலம், மொழி, பொருளாதார வாழ்வு, உளவியல் சார்ந்த ஒருமைப்பாடு ஆகியவற்றை இழந்துவிடுவர். எனவே தமிழர்கள் இன ஒடுக்குதல்களுக்கு எதிராக அணிதிரண்டு தமிழீழம் கோரவோ அல்லது சமஷ்டி அமைப்பு முறை கோரவோ அல்லது தமக்குள்ள தகமைகளை இழந்து விடுவார்கள். வரலாற்றின் ஓட்டத்தில் பலர் சிங்கள மொழியைக்கற்று சிங்கள மக்களுடன் ஒன்றிணைந்து அவர்களுள் ஒருவராக வாழ நேரிடலாம். குறிப்பாக திருகோணமலை, அம்பாறை, வவுனியா போன்ற பகுதிகளில் இந்த ஆபத்துள்ளது.

எனவே தமிழ் மக்களது போராட்டங்கள் தொடர்பாக இலங்கைக்கு இருந்து வரும் இனப் பிரச்சனை தீர்ந்து விடும் என்று ஜே. ஆர். ஜெயவர்த்தனா அறிவித்துள்ளார்.

இப்புதிய அணுகுமுறையை எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறீர்கள் எனப் பத்திரிகையாளர்கள் வினவியபோது வடக்கு கிழக்கு

(11ம் பக்கம் பார்க்க)

## விருதலைப் போராட்டத்தில் மக்களின் பங்கு என்ன?

எமது மக்கள் எதிரியின் ஒவ்வொரு அசைவுகளையும் எதிரியின் உரையாடல்களையும் உன்னிப்பாக அவதானித்தல் எதிரியின் எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றிய அவதானிக்க கூடியதாக இருக்கும்.

எதிரிகள் என்று நாம் கூறும் பொழுது நாம் யாரைக் குறிப்பிடுகிறோம் என்று நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். எமது தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் அவர்களது அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிப்பவர்களும் அத்தகைய நடவடிக்கைகளினால் பயன் அடைபவர்களும் ஆவர். அவ்வாறு பார்க்கையில் எதிரியும் அவர்களைச் சார்ந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமில்லாமல் பலவாறு பிரிந்து பல பகுதிகளில் பல வகையான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு உள்ளார்கள் என்பதை நாம் முதலில் உணர வேண்டும். நாம் எதிரியின் எதிர்கால நடவடிக்

(12-ம் பக்கம் பார்க்க)

# தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கோர் அறைகூவல்

"In any war a good plan and Sound preperation means, Victory is already helf won"

—Field Marshal Montgomery.

தமிழீழ விடுதலைக்குப் பல்வேறு இயக்கங்கள் போராடி வருகின்றன. விரல் விட்டு எண்ணினால் இரு கை விரல்களும் போதாது என்கிற அளவிற்கு அவைகளின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது.

சில இயக்கங்கள் தாங்கள் மட்டுமே களத்தில் நிற்பதாகக் கூறிக்கொள்கின்றன. மற்றும் சில தங்களுக்குள் எதிர்காலத்தில் இணைப்பு ஏற்படுத்திக் கொள்ளலாம். தங்கள் இயக்கங்களின் சித்தாந்தம் எந்த நிறத்தில் இருந்தாலும், அச்சித்தாந்தங்களின்படி அமையவிருக்கும் தமிழீழம் எந்தஉருவத்தில் இருந்தாலும் இவர்கள் அனைவருடைய முயற்சிக்கும் பொதுவான தடையாக இருப்பது சிங்கள அரச எந்திரமே.

எல்லா ராணுவங்களிலும் அதற்கென தெரிவு செய்யப்பட்ட இளைஞர்கள் அப்படையிலிருந்து விலகிச் செல்லும் வரை அவர்களை முழுமையான ராணுவ வீரர்களாக்கும் பயிற்சி முடிவதில்லை. உலக வரலாற்றில் அலெக்சாண்டர், கெனிபால், நெப்போலியன், ஜெனரல் கியாப் என்று விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் மட்டுமே தங்களை ராணுவத்தளபதிகள் என்று நிருபணம் செய்து கொண்டவர்களாவர்.

ஏனைய ராணுவத் தளபதிகளும், ஜெனரல்களும் பீல்டு மார்ஷல்களும் இவர்கள் வகுத்த வழிகளில் சிறப்பாகச் செயலாற்றியவர்கள் அல்லது சிறப்பாகச் செயலாற்ற முயன்றவர்கள் என்ற இரு பிரிவிற்குள் அடங்குவார்கள்.

ஆக உலக ராணுவ வரலாறு என்பது போராளகளுக்குப் பரந்துபட்ட பேரறிவுகளும், ஆற்றலுக்கும், அனுபவத்திற்கும ஒரு களஞ்சியமாகவே விளங்குகறது. அதுபற்றித் துளியும் அறிய முயலாமல் இராணுவ உடைகளை அணியவும், ஆயுதங்களை இயக்கவும், ராணுவச் சம்பிரதாயங்களைக் கடைப்பிடிக்கவும் மட்டுமே கற்றுக் கொண்டால் போதும் என்ற ரீதியில்தினம் ஒரு ராணுவம் தமிழீழத்தில் கட்டியமைக்கப்பெறுகிறது. உலகின் "மூத்தகுடி" அறியாமையில் மூழ்கிக்கிடக்கிறது என்பதையே இது காட்டுகிறது.

சேகுவாரா உலகின் தலைசிறந்த கெரில்லா தளபதி ஆவார். அவர் தலைமையில் நடந்த பொலிவியா நாட்டுப் போராட்டம் முறியடிக்கப் பட்டது.

1947 ஆம் ஆண்டு 85,000க்கு மேற்பட்ட ஆயுதம் தாங்கிய வீரர்களைக்கொண்ட மிகப்பெரிய கெரில்லா இயக்கமான ஹக்ஸ் (Kuks) மிக எளிதாக நசுக்கப் பட்டது.

தேவையே கண்டுபிடிப்பின் தாய். அதன்படி தமிழீழத்திற்குத் தேவையான புதிய செயல்முறையை எமது கழகம் வடிவமைத்து அதைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தத் தயாராகிக் கொண்டுள்ளது. எமது ராணுவ செயல்முறையானது உலக ராணுவ வரலாற்றில் 'ஒரு புதிய அத்தியாயமாக எழுதப்பெறும். இதை வருங்கால வரலாறு உறுதி செய்யும்.

எமது பார்வைகள் தொலைநோக்கானவை, எமது சிந்தனைகள் தெளிவானவை, நாங்கள் செல்லுகின்றபாதை சரியானது என்று எமது கழகச்செயலதிபர் நாட்டுமக்களுக்கு தமது முதலாவது வானொலி உரையில் கூறியுள்ள செய்தியை போராளிகளுக்கும், இயக்கங்களுக்கும் நினைவூட்ட விரும்புகிறோம்.

## எமது நோக்கு

மலேயா நாட்டுக் கெரில்லாக்கள் ஆயுதத்தால் முறியடிக்கப்பட்டதை விட பெரி பெரி நோயினாலேயே மரித்தனர். இவ்வளவு வரலாறுகளையும் கண்ட பிறகும் கெரில்லாப் போர்முறை என்பது சகல சூழ்நிலைகளிலும் வெற்றியைத் தேடித்தரும் மாயவித்தை என்று நம்பிக் கொண்டிருப்பவர்களைக் கண்டு இரக்கப்படுகிறோம்.

காலுக்கேற்ற செருப்பையே தேட வேண்டும். கிடைத்த செருப்புக்காக காலை வெட்டுவது அறிவுடைமையாகாது, தமிழீழ விடுலைக்குப் போராடப் போர் வீரன் குழந்தையாக இருந்த காலத்தில் கெரில்லாத்தாக்குதல் என்ற சிறு செருப்பு அவனது கடும் பயணத்திற்குத் துணை நின்றது. இன்று விசுவரூபம் எடுத்திருக்கிற அவ்வீரனுக்குப் புதிய செயல்முறை ஒன்று கட்டாயம் தேவைப்படுகிறது என்று எமது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எண்ணுகிறது.

அவசரத்தில் அள்ளித் தெளிப்பதெல்லாம் கோலமாகாது. அதனால் ஒரு தெளிவான போராட்டத்திற்கு தங்களைப் பிணைத்துக் கொள்ள அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

எந்தப் போரிலும் சிறந்த திட்டமும் உரிய தயாரிப்புக்களும்தான் போர்க்களம் போகும் முன்னரே பாதி வெற்றியை உறுதிப்படுத்தும்" என்று பீல்டு மார்சல் மோன்ட்கோமரி கூறுகிறார். அதை தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் மீண்டும் ஒரு முறை உறுதி செய்யும். அதுவே நாளைய வரலாறாகவும் இருக்கும்.

*எனவே எமது அருமை தோழர்களே!*
*வாருங்கள் இணைந்து போராடுவோம்!*
*இறுதி வெற்றி நமதே!*

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ தென்பது இழுக்கு

—திருக்குறள்

# அமெரிக்க, பிரித்தானிய அரசுகளின் இரட்டை வேடம்!

***இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வை வலியுறுத்துவது போல் உலகிற்குக் காட்டிக்கொள்ளும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் பிரித்தானியாவும் சிறீலங்காவின் கடன் வசதிகளை அதிகரிப்பதன் மூலமும் இஸ்ரேல் தென்அமெரிக்கா, சீனா போன்ற நட்பு நாடுகளூடாக இராணுவத் தளபாடங்களையும், கடற்படைக் கப்பல்களையும்சிறீலங்கா அரசுக்கு அளிப்பதன்மூலமும் இராணுவத் தீர்வு ஒன்றுக்கு சிறீலங்கா இனக்கொலை அரசை ஊக்கி வருகின்றன.***

அமெரிக்க, பிரித்தானிய அரசுகள் இனவாத சிறீலங்கா அரசுடன் நெருங்கிய இராஜதந்திர உறவுகளைக் கொண்டிருக்கின்றன. இவ்வுறவுகளைக் காரணம் காட்டித் தமிழீழப் போராளிகளையும் தமிழ் மக்களையும் ஒடுக்குவதற்குச் சிறீலங்கா அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமும் பிரித்தானிய முதலாளித்துவ அரசிடமும் இராணுவ உதவி கோரும் என முன் கூட்டியே அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்திருந்தனர். இத்தகைய சூழ்நிலை உருவாகும் போது அமெரிக்க, பிரித்தானிய அரசுகள் சிறீலங்கா அரசுக்கு ஆயுதங்களை வழங்குமேயானால் இலங்கை வாழ் தமிழ் மக்கள் சிங்கள இனவாதிகளினால் பூண்டோடு அழிக்கப்படுவார்கள். இந்நிலையில் இந்திய அரசு ஒரு இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்படும் என உணர்ந்த மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் இனப்படுகொலை குறித்து அமெரிக்க ஜனாதிபதி ரீகனுக்கும், பிரித்தானியப் பிரதமர் திருமதி மாக்கிரட் தட்சருக்கும் கடிதம் அனுப்பியிருந்தார். அக்கடிதத்தில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வு காணப்படல் வேண்டும் எனவும் அதற்கு அமெரிக்க, பிரித்தானிய அரசுகள்; தமிழர் பிரச்சனையில் ஒரு சுமுகமான அரசியல் தீர்வு காண்பதற்கு ஒத்துழைக்கவேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

திருமதி இந்திராகாந்தி அவர்களும் இந்திய அரசும் தமிழர்களின் பிரச்சனையில் மிகவும் அக்கறையுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை உணர்ந்த அமெரிக்க, பிரித்தானிய அரசுகள் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படல் வேண்டும் என அறிவித்திருந்தன. ஆனாலும் அவை சிறீலங்கா இனவாத அரசுடன் மேலும் நெருக்கமான உறவுகளை வளர்த்து வரலாயின. இத்தகைய உறவுகளை மேலும் உறுதிப்படுத்தும் விதத்தில் சிறீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா கடந்த ஆண்டு இரு நாடுகளுக்கும் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். வாஷிங்டனில் ரீகனுடனும், பிரிட்டனில் திருமதி மாக்கிரட் தட்சருடனும் உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடாத்திய ஜே. ஆர். ஜெயவர்த்தனா "விடுதலைப் போராளிகள் பயங்கரவாதிகள் எனவும் இலங்கையில் பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு சிறிலங்கா அரசுக்கு அமெரிக்க அரசும் பிரித்தானிய அரசும் உதவவேண்டும்" எனவும் கேட்டிருந்தார். அவை தமிழர்களின் பிரச்சனைக்கு ஒரு சுமுகமான அரசியல் தீர்வு காணப்படல் வேண்டுமென விரும்புவதாகச் சிறிலங்கா ஜனாதிபதிக்கு அறிவித்ததாகக் கூறியிருந்தன.

ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியம் 100 கோடி ரூபா பெறுமதியான ஆயுதத்தளவாடங்களை படிப்படியாகச் சிறீலங்கா அரசுக்குக் கொடுத்துதவிவருகிறது. இதை உறுதிப்படுத்தும் விதத்தில் அமெரிக்க ஜனாதிபதி இவ்வாண்டு தொடக்கத்தில் தனது விசேஷ பிரதிநிதியாக செனட்டர் சாள்ஸ் பேர்சி (CHARLES PERCY) என்பவரை சிறீலங்காவுக்கு அனுப்பியது. அதைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்பு அமைச்சரின் இரகசிய அமெரிக்க விஜயமும்; அமெரிக்க, சிறீலங்காவின் நெருக்கமான கள்ளத் தொடர்பைக் காட்டுகின்றன. அண்மையில் ஜோர்டானிலிருந்து சிறீலங்கா அரசுக்கு இராணுவத் தளவாடங்கள் ஏற்றிவந்த 'சய்ரே' நாட்டு விமானம் எரிபொருள் பற்றாக் குறையால் திருவனந்தபுரம் விமானநிலையத்தில் இறங்கியது. அப்போது அவ்விமானம் ஏராளமான ஆயுதங்களை இலங்கைக்கு ஏற்றிச் செல்வது அம்பலமாகியது.

அண்மையில் பிரித்தானியாவிடமிருந்து இலங்கை பத்து பீரங்கிப் படகுகள் உட்பட ஏராளமான ஆயுதங்களைப் பெற்றதிலிருந்து பிரித்தானியாவின் நிலையும் நமக்குப் புரிகிறது. இதை உறுதிப்படுத்தும் விதத்தில் மேலும் இராணுவ உதவிபெற வெளிநாட்டமைச்சர் ஹமீட் இலண்டன் சென்று திரும்பியுள்ளார்.

இவை ஒரு புறத்திலிருக்க—

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தொங்குதசையான இஸ்ரேலின் "மொசாட்" ஆட்கொல்லிப் படையினர்தான் கடந்த ஓராண்டிற்கு மேலாக இலங்கை இனவெறி ஆயுதப்படையினர்க்குப் பயிற்சியளித்து வருகின்றனர். இப்போது இஸ்ரேல் இலங்கைக்குப் போர்ச்சாதனங்களையும் அளிக்கிறது. சமீபத்தில் இரண்டு ரோந்துக் கப்பல்களையும் இஸ்ரேல் வழங்கியுள்ளது. இவை ஏவுகணைகளைப் பொருத்தும் வசதி கொண்டவை. இதைப் பற்றி இலங்கை அரசு எதுவும் தெரிவிக்காவிட்டாலும் லண்டனிலிருந்து வெளிவரும் "ஜேன்ஸ் டிபன்ஸ் வீக்லி" ஏடு இதை அம்பலமாக்கியுள்ளது.

இவ்வாறு சொல் ஒன்று செயல் ஒன்றுமாகச் செயல்படும் அமெரிக்க, பிரித்தானிய அரசுகளின் இரட்டை வேடத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இன்று தென்னாபிரிக்கா, நமீபியாபோன்ற நாடுகளின் விடுதலைப் போராட்டங்களில் எவ்வாறு இவ்விரு அரசுகளும் இரட்டை வேடம் போடுகின்றனவோ அவ்வாறு தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும், அமெரிக்க, பிரித்தானிய அரசுகள் இரட்டை வேடம் போடுகின்றன. ○

# வரலாற்றின் திருப்பு முனையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தமிழ் பேசும் தேசிய இனத்தின் இறைமைக்கும் அவர்களது அரசியல், சமூக பொருளாதார விடுதலைக்குமான போராட்டத்தின் பிரதான வடிவமாக ஆயுதப்போராட்டத்தை முன் வைத்தது. அதே வேளையில் நீண்டகால கெரில்லாப் போராட்டத்தைக் கழகம் நிராகரித்தது; தற்காப்புத் தவிர்ந்த ஏனைய தாக்குதல்களைப் பிற்போட்டது. திட்டமிட்ட அடிப்படையில் அமைப்பு ரீதியாக அரசியல், இராணுவ, கலாச்சார அணிகளாக மக்களைத்திரட்டி அனைத்து தமிழீழப் பகுதிகளையும் உள்ளடக்கிய விடுதலைப் போராட்டத்துக்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டிருந்தது.

கழகம் ஆரம்பநிலையில் கைக்கொண்ட இராணுவத்தாக்குதல்களை பின்போட்டபோது வேறு சிலர் எதிர்பிரசாரம் செய்தபோதும் மேலும் மேலும் ஆழமாக மக்கள் மத்தியிலும், களத்திலும் நின்று விடுதலைப் போராட்டத்திற்கான அமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தது. மக்களை விட்டு விட்டு தெரிந்தெடுத்த இராணுவத்தின் கையில் விடுதலைப் போராட்டத்தை ஒப்படைப்பதை நிராகரித்த கழகம் மக்கள் அமைப்புக்களைக் கட்டி எழுப்பும் பணிக்கு முதன்மையளித்தது. இதன் மூலம் உண்மையில் சமூகம் போர்க்களத்தில் மேலும் மேலும் ஆழமாகவும், தீர்க்கமாகவும் காலூன்றிக் கொண்டது.

நீண்டகாலக் கெரில்லாயுத்தத்தை ஆரம்பித்த போதே எதிரி இனக்கொலையைக் கட்டவிழ்த்து விட்டான். நமது போராட்டத்தை, ஒரே தேசிய இனத்துள் நடக்கும் வர்க்கப் போராட்டத்தைக் கையாளுவதுபோல வர்க்க ரீதியானதும் அமைப்பு ரீதியானதுமான தெரிவு அடிப்படையில் எதிரி கையாளவில்லை. சிங்களப் பெருந் தேசியஇனஅரசு, அரசும் படையுமற்ற நமது தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்து தெரிவுகள் ஏதுமின்றி கண்மூடித்தனமான இனக்கொலையின் மூலம் பதிலளிக்க ஆரம்பித்த யதார்த்தத்தைக் கழகம் சரியாகவே புரிந்துகொண்டது. இதன் அடிப்படையில் நமது போராட்டம் தொடர்பான பல்துறை ஆய்வுகளதும், நீண்டகாலக் கெரில்லா போராட்டத்தின் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பான சமகால சர்வதேச அனுபவங்களதும் படிப்பினைகளின் அடிப்படையிலேயே கழகம் நீண்டகால கெரில்லாப் போராட்டத்தை நிராகரித்திருந்தது.

இதற்கு மாறாக மிகவும் குறுகியகால கெரில்லாப் போராட்ட நடவடிக்கைக்களுக்கூடாக தமிழீழம் தழுவிய ஒட்டுமொத்தமான விடுதலைப் போராட்டத்துக்கான மூல உபாயத்தை வகுத்துக் கொண்டு அரசியல் இராணுவத் தயாரிப்புக்களில் இதுவரை கழகம் ஈடுபட்டு வந்துள்ளது.

மக்களின் பெரும்பகுதியினர் இந்த மூலஉபாயத்தை ஏற்றுக்கொண்டு கிராம மட்டங்களிலும், தேசமட்டங்களிலும் கழகத்தின் மக்கள் அமைப்புக்களைப் பலப்படுத்தினர். இதனால் தாக்குதல்களை பின்போடுவதன்மூலம் அகரீதியாகவும் புறரீதியாகவும் அளவு (Quantitative) தரம் (Qualitative) சார்ந்த பல்வேறு வளர்ச்சி நிலைகளைத் திட்டமிட்டபடி அடைந்துள்ளது. இது விடுதலைப்போராட்டத்தில் தமிழீழ மக்கள் ஈட்டியுள்ள மகாத்தான ஒரு வெற்றியாகும்.

வேறு சில இயக்கங்கள் நமது மூல உபாயத்தின் நியாயங்களைத் ஒத்துக் கொள்ளாமல் பெரும் அளவிலான விடுதலைப் போருக்கான ஆரம்பத் தயாரிப்பு ஏதுமின்றி சிறுசிறு தாக்குதல்களையே தொடர்ந்தனர். இதனால் தமிழீழ மண்ணில் சமூக, அரசியல், இராணுவ சூழலில் பாரியதும்; சாதக அம்சங்களைவிட அதிகமான பாதக அம்சங்களைக் கொண்டதுமான பாதிப்புகளை ஏற்படுத்தி வந்தனர். இத்தகைய பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளாகிய, கழகம் தனது மூலஉபாயத்தை மாறிவரும் புதிய நிலைமைகளுக் கேற்பச் செம்மைப்படுத்திக் கொண்டு மக்கள் யுத்தத்திற்கான தயாரிப்பில் முதிர்ச்சி நிலையை அடைந்திருக்கின்றது.

## எதிரியின் மூல உபாயமும் அதன் தோல்வியும்

நமது திட்டமிட்ட தயாரிப்பு நடவடிக்கைகளையும் சகல தமிழீழ விடுதலை இயக்கங்களும் குணாம்ச அறிவு அம்சரீதியாக வளர்ச்சி பெற்று வருவதையும் அறிந்து கொண்ட ஸ்ரீலங்காவின் சிங்கள பௌத்த பேரினவாத அரசும் அமெரிக்க உளவுத்துறையும் நமது தயாரிப்புகள் பூர்த்தியடைய முன் நம்மைக் களத்தில் இறக்குவதற்கான தந்திரத்தை; அதாவது அகால யுத்தத்தில் நம்மைக் குதிக்க வைப்பதற்கான தந்திரோபாயத்தைக் கையாண்டன. அமரர் இந்திராகாந்தி அம்மையாரின் மரணத்தின் பின்னர் இந்திய உபகண்டத்தில் அரசியல் உறுதிப்பாடு பாதிக்கப்பட்டிருந்தது என்கிற கணக்கின் அடிப்படையில் பெருமளவில் இனக் கொலையைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலமும் பணயக் கைதிகளாக மக்களைப் பெருமளவில் சிறைப் பிடிப்பதன் மூலமும் நம்மை ஒரு அகால யுத்தத்தில் குதிக்கவைக்கும் முயற்சி அமெரிக்க C.I.A.யின் ஆலோசனையின் பேரில் நடந்தது.

கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் எதிரி தீவிர முயற்சிகளில் ஈடுபட்டான். இதற்கான சூழலை உருவாக்குவதற்கு எதிரி அரசு முயன்று வந்தபோது சொல்லி வைத்தாற்போல மக்களுடன் எவ்வித தொடர்புமில்லாத அறிக்கை வேந்தன் ஒருவர் தைப்பொங்கலன்று தமிழீழம் பிரகடனப்படுத்தப் படும் என அறிக்கை ஒன்றை விடுத்தார். ஸ்ரீலங்காவின் கொலைகார இனவெறி அரசும் தனது C.I.A. ஆலோசகர்கள் அறிவுறுத்தியத்திற்கிணங்கி மேற்படி அறிக்கையை பற்றிக்கொண்டு தமிழ்பேசும் மக்கள் மீது கொடிய தாக்குதல்களைக் கட்டவிழ்த்து

விட்டது. இதன் பிரதிபலிப்பாக மூஸா மற்றும் ஏனைய கொடுஞ்சிறைகளுக்குப் பல்லாயிரம் தமிழ் இளைஞர்கள் பணயக் கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஒன்றில் ஒரேயடியாக களத்தில் இறங்கி யுத்தத்தை ஆரம்பியுங்கள் அல்லது ப்பார் நிறுத்தம் ஒன்றை அறிவித்துவிட்டு ஜே.ஆருடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பியுங்கள் என நமக்கு அரசியலற்ற மனித உரிமையின் பேரில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. தமிழ் மக்கள் மீதான இனக்கொலைக்கு அரசியலற்ற மனிதஉரிமை அடிப்படையிலான அணுகுமுறை என்பதன் அர்த்தம்தான் யாது? எதிரியின் கைகளில் உள்ள இரத்தக்கறைகளை மறைத்து விட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் விடுதலை இயக்கங்களின் மீது இனக்கொலைக்கான பழியைப் போடும் கேவலமான செயலுக்கான முகமூடிதான் அது.

ஆனால் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் மாட்டிக் கொள்ளவில்லை; அகால யுத்தத்தை ஆரம்பிப்பதன் மூலமோ அல்லது சரணாகதியடைவதன் மூலமோ தற்கொலை செய்ய நாம் மறுத்து விட்டபோதும் தமிழ்பேசும் மக்கள்படும் சொல்லொணாத் துயரங்கள் நம்மை அன்றும் துடிக்கவே வைத்தன. எனினும் உணர்ச்சிகளால் கழகம் பிழையான முடிவுக்கு வந்துவிடவில்லை.

துயரங்களுக்கும் மரணங்களுக்கும் கற்பழிப்புகளுக்கும் மத்தியில் தலைபணியாது நிற்கும் நமது மக்களது நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் இறுதி வெற்றியை உறுதிப்படுத்தும் மூல உபாயத்தின் அடிப்படையில் போதிய தயாரிப்புகளுடன் அனைத்து தமிழீழம் தழுவிய ஆயுதப்போராட்டத்தை ஆரம்பிப்பதனமூலம் மட்டுமே நாம் நிறைவேற்றமுடியும்.

## இன்று நமது தலையாய பணி பரந்துபட்ட ஐக்கிய முன்னணியைக் கட்டிஎழுப்புவதாகும்!

இன்று தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் போர்க்கோலம் கொண்டிருப்பவர்களும், மக்களின் நம்பிக்கைகளையும் எதிர்ப்புக்களையும் நிறைவேற்றும் நமது வரலாற்றுக் கடமையைப் பூரணப் படுத்துவதற்கு முறைப்படி தயார்பட்டுள்ளவர்களாகிய நாம் இயக்கங்களுக்கிடையே ஒரு ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பும் பணியை முதன்மைப் படுத்திச் செயற்படுகிறோம். மக்களை எவ்விதத்திலேனும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றதும், எதிரிக்கு எதிராக எவ்விதத்திலேனும் போராடி வருகின்றதுமான ஏகாதிபத்தியத்திற்கு விரோதமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள அனைத்து விடுதலை இயக்கங்களுடனும் அரசியல் சமூக கலாச்சார அமைப்புக்களுடனும் ஒரு பரந்துபட்ட ஐக்கியத்தைத் துரிதமாக ஏற்படுத்தும் முயற்சிகளில் அமைப்பு ரீதியாகவும் அந்தரங்க சுத்தியுடனும் நாம் ஈடுபட்டு வருகின்றோம். இம்முயற்சிகளிலும் திட்டமிட்ட அடிப்படையில் நாம் முன்னேறி வருகின்றோம் என்பதையும் பெருமையுடன் வெளிப்படுத்துகின்றோம்.

கடந்த காலங்களில் நாம் தவறுகள் செய்யவில்லை என்று ஒருபோதும் கூறமாட்டோம். ஏனைய அமைப்புகள் தொடர்பான சிக்கல்களின் பிழைகள் யாவும் ஏனைய இயக்கங்களின் பக்கத்தில் மட்டுமே இருந்ததென்றும் நாம் கூறவில்லை. அவ்வப்போது இயக்கங்களுக்கிடையில் எழுந்த ஒவ்வொரு பிரச்சனைகளையும் நாம் ஆராய்ந்து தவறு நம் பக்கம் இருந்ததைக் கண்டறிந்த தருணங்களில் எல்லாம் அத்தகைய தவறுகள் எதிர்காலத்தில் இடம் பெறாதவகையில் அமைப்பு ரீதியான செம்மைப் படுத்துதல்களைச் செய்துவந்திருக்கின்றோம். எதிர் காலத்திலும் மேலும் தீவிரமான முறையில் இதனை நாம் செய்துவருவோம். ஏனைய இயக்கங்களின் தவறுகளைப் பொறுத்தமட்டில் அதிகபட்ச பொறுமையைக் கடைப்பிடித்துள்ளதோடு பேச்சு வார்த்தை மேசையில் விடயங்களை நேர்மையாகப் பேசித் தீர்த்துக் கொள்ளும் பண்பை வளர்த்து வந்துள்ளோம். தொடர்ந்தும் நாம் மேலும் தீவிரமான முறையில் இப்பண்பைக் கைக் கொள்ளுவோம்.

இன்று போர்க்களத்து வாசலில் நிற்கும் நாம் இயக்கங்களுக்கிடையிலான ஐக்கிய முன்னணியும், பரந்துபட்ட மக்களது சமூக கலாச்சார அமைப்புக்களுடனான ஐக்கியத்தையும் கிராமமக்கள் தலைமைகளுடனும் அறிஞர்களுடனும் வல்லுநர்களுடனுமான உறவுகளையும் வளர்ந்துக் கொள்வதன்மூலம் தமிழீழ மக்களது விடுதலைப் போராட்டத்தை சந்தேகங்களுக்குகிடமற்ற வெற்றியின் பாதையில் முன்னெடுத்துச் செல்லலாம் எனப்பூரணமாக நம்புகிறோம்.

## அனைத்துத் தமிழ் பேசும் மக்களது விடுதலைப்போராட்டம் வெற்றி பெற்றே தீரும்!

மரணத்துள் வாழும் நமது மக்களது கண்ணீருக்கும் இரத்தத்துக்கும் ஏக்கங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தக்க விதத்தில பதிலளிக்கும் என்பதை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

இதனடிப்படையில் தமிழ், முஸ்லீம், மலையக மக்களது பல்வேறு சமூக, பொருளாதார நலன்களை உறுதிப்படுத்துகின்ற வகையில் தமிழ்பேசும் மக்களது விடுதலைப் போராட்டத்தைப் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியினூடாக முன்னெடுத்துச் செல்வதற்காக நாம் ஆர்வமுடன் உழைத்து வருகின்றோம். தேச விடுதலைப் போரிலும் தேசத்தின் அரசை அமைப்பதிலும் தேச நிர்மாணத்திலும் நாம் என்றென்றும் கைகோர்த்து நிற்போம்.

ஏகாதிபத்திய விரோத போர்க்குணத்துடன் சகலமட்ட ஒடுக்குதல்களுக்கு எதிரானதும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதும் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்வதுமான மக்களது சகல அரசியல் சமூக பொருளாதார அபிலாஷை வெளிப்பாட்டுக்கும் நடைமுறைக்கும் நமதுகழகம் ஊடாக அமையும். இந்த வகையில் நாம் மேலும் பரந்துபட்டவும் பண்படவும் சகலமட்டங்களிலும் மக்களது ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம். மரணத்துள் தலைகுனியாது நிமிர்ந்து நிற்கும் நமது மக்களது தியாகங்கள் மகத்தானவை! அவர்க்கு என்றும் தோல்வி கிடையாது!

வெல்க தமிழ் பேசும் மக்களது தேசிய இன விடுதலைப் போராட்டம்!

வெல்க அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான இந்து சமுத்திர நாடுகளினதும் தமிழீழத்தினதும் ஐக்கியம்!

வெல்க சுதந்திரத்திற்கும் விடுதலைக்குமான சர்வதேசமக்களது போராட்டங்கள்!

# மரணம் வாழ்வின் முடிவல்ல




தோழர் ஞானவேல்
(பாண்டி அல்லது கறுப்பன்)

தமிழீழ விடுதலைப் போராட்டமானது முனைப்பாக மாறிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும்; தமிழீழ விடுதலைப் போராளிகளையும், தமிழீழ மக்களையும் நிர்மூலமாக்குவதற்குச் சிறீலங்கா இனவாதஅரசு பல்வேறு வடிவங்களைக் கொண்டதான ஒடுக்குமுறைகளைக் கையாண்டு வருகின்றது. இத்தகைய ஒடுக்கு முறை வடிவங்களில் ஒன்றான கடற் பாதுகாப்பு வலயத்தையும் மீறி சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மோட்டார் இயந்திர விசைப் படகானது பெப்ரவரி 08-1985 ல் நடுக்கடலில் வைத்து சிறீலங்கா கடற்படையினரால் முற்றுகைக்குள்ளானபோது எமது இயக்கத் தோழர்களுக்கும் சிறீலங்கா கடற்படையினருக்கும் இடையே ஏற்பட்ட நேரடித் துப்பாக்கிச் சமரில் எமது இயக்கத் தோழர்களான ஞானவேல் (பாண்டி அல்லது கறுப்பன்) வல்வெட்டித்துறை; சுதாகரன் (சின்னமலை அல்லது இரகுபதி) மீசாலை; இரஞ்சித் றொபேட் (டக்ளஸ்) வவனியா; இரவீந்திரன் (அம்பி) யாழ்ப்பாணம்; மோகன் (ரூபன்) கரவெட்டி ஆகியோர் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர்



தோழர் சுதாகரன்
(சின்னமலை அல்லது இரகுபதி)

தமிழீழ மக்களின் உரிமை மீட்கப்பட்ட செயல் மறவன்; ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடும் வீரர்களின் உற்ற தோழன், மக்கள் நலன் பேண நாளும் உழைத்தவன், மக்களை அளவுக்கு அதிகமாக நேசிப்பவன், அதி சிறந்த படகோட்டி. இவர் தான் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் முன்னணித் தோழரான பாண்டி அல்லது கறுப்பன் என்று அழைக்கப்படும் தோழர் ஞானவேல். பரந்துபட்ட மக்களின் ஆயுதப் போராட்டத்தின் மூலமே தமிழீழ மக்களின் விடுதலையை வென்றெடுக்க முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். எமது இயக்கத்தில் தானும் ஒருவனாக இணைந்து தனது செயற்பாட்டினால் எமது இயக்கத்தின் உயிர் நாடியாக விளங்கியவர்.



தோழர் ரஞ்சித் றொபேட் (டக்ளஸ்)

தோழர் பாண்டி சிறீலங்கா இனவெறி அரசினால் கைது செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் மனித வதை முகாம்களில் வைத்துச் சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டவர். வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலையின்போதும் மட்டுநகர் சிறையுடைப்பின் போதும் பல விடுதலைப் போராளிகளின் உயிரை மீட்பதற்கு முன்னின்று போராடிய பெருமைக்குரியவர்.



தோழர் இரவீந்திரன் (அம்பி)

சிறீலங்கா அரசின் கெடுபிடிகளால் அகதிகளாக வந்தவர்களின் நிலை கண்டும் பாதுகாப்பு வலையம். கடலடங்குச்சட்டம் ஆகியவற்றால் பாதிப்படைந்த கடற்

தொழில் செய்யும் மக்கள் குடும்ப வறுமையால் வாடுவது கண்டும் அம்மக்களைக் காப்பாற்ற வேண்டியதன் பொறுப்பையும் அவசியத்தையும் உணர்ந்து பல தடவைகள் பின் தளத்தில் இருந்து உணவுப் பொதிகளுடன் வந்து அம்மக்களை பட்டினியின்றிக் காப்பாற்றிய மனித நேயம் கொண்ட ஒரு போராளி. இம்முறையும் உணவுப் பொதிகளுடன் வந்து கொண்டிருக்கும் வேளையில் சிறீலங்கா கடற்படையினருடன் போராடித் தன் உயிரைத் தியாகம் செய்து வீர வரலாறு படைத்துக் கொண்டார்.



**தோழர் மோகன் (ரூபன்)**
**சின்னமலை அல்லது இரகுபதி**

என்று அழைக்கப்படும் தோழர் சுதாகரன் மக்கள் அழிவின் மீது பெறப்படும் விடுதலையில் வெறுப்புக் கொண்டவர். சிறிது நேர ஓய்வையும் விரும்பாது தமிழீழ மக்களின் விடுதலைக்கு உழைத்தவர் சிறீலங்கா அரச கூலிப் படைகளால் தமிழீழத்தில் நிகழும் இன அழிப்புக்களையும் ஏனைய அத்துமீறல்களையும் உடனுக்குடன் தொகுத்து வெளிநாடுகளுக்குப் பிரச்சாரப்படுத்தும் பணியில் முன்னின்று உழைத்தவர். இவர் போன்றே தோழர்கள் டக்ளஸ்; ரூபன்; அம்பி போன்றோரும் தோழர் பாண்டிக்கு உதவியாக ஆயுதம் ஏந்தி சிறீலங்கா கடற்படையினருடன் வீரச்சமர் புரிந்து தமது உயிரைத் தமிழீழ மக்களின் விடுதலைக்கு உரமாக்கி வீர வரலாறு படைத்த செயல் மறவர்கள்.

※

# மக்கள் விடுதலைக் கழகம் தமிழ் மண்ணை மீட்குமடா.

மக்கள் விடுதலைக் கழகம் ★ தமிழ்
மண்ணை மீட்குமடா!
மனித உரிமை காக்குமடா!
மனிதா இதைப் போற்றிடடா!

[மக்கள்...]

ஆணும் இங்கே பெண்ணும் இங்கே
அடிமைகள் இல்லையடா,
ஆள்பவன் செய்யும் அதிகாரத்தை
அஞ்சாது எதிர்த்திடடா!

[மக்கள்...]

அடி ஒரு தடவை விழும்வரை
உணர்வைப் பெறுதல் இது முறையோ?
அடுத்தவன் இன்று நாளை நீதான்
அறிவாய் இது முறையோ?

[மக்கள்...]

காட்டைத் திருத்திய கரங்களில் இன்று
பூட்டினார் விலங்கையடா!
நாட்டை மீட்கும் வர்க்கம் அதுதான்
நாளை உணர்த்துமடா!
வெலிக்கடை போலே படுகொலை தொடர்ந்தால்
ஓய்ந்தா போவோம் நாம்?
வேண்டும் சுதந்திரம் என்றே ஆதிக்க
வேரை அறுப்போம் நாம்!

[மக்கள்...]

போலிகள் இங்கு வேலிகளாமே
பயிரை மேயுதடா
நாழிகை கூட நீ பொறுத்தாலும்
நடக்கும் தீமையடா!
உடமைகள் எதுவும் இழப்பதற்கில்லை!
ஆயுதம் நீ தாங்கு!
உறிஞ்சும் இந்தச் சுரண்டலமைப்பை
உடைத்துத் தூளாக்கு!

★

★ எமது போராளிகள் எந்த இலட்சியத்திற்காக; எந்தக் கொள்கைக்காகத் தமது உயிரைத் தியாகம்செய்து எந்த மக்களின் விடுதலையின் மீது நேயம் கொண்டு போராடினார்களோ; அந்த மக்களின்விடுதலையைவென்றெடுப்பதே மறைந்த எமது போராளிகளுக்கு நாம் செய்யும் அஞ்சலியாக இருக்க முடியும். ★

# விடுதலைக்குப் போராடும் ஒரு வீரத் தாய்

தென் ஆபிரிக்கா பெற்ற ஒரு வீரத்தாய்தான் அல்பர்டினா சிசுலு. இவருக்கு இப்போது அறுபத்தேழு வயதாகிறது.

தமது வாழ்வின் பெரும்பகுதியைச் சிறைகளிலேயே கழித்துள்ள அன்னை அல்பர்டினா 1944 ஜூலை 18ல் வால்டர் சிகலுவைத் திருமணம் செய்தார். அவருக்கு இப்போது 73 வயது. தங்களது திருமண வாழ்வைப் பற்றிக் கூறும்போது ''சாதாரண வாழ்க்கை ஆறு மாதங்கள் கூட இல்லை'' என்கிறார் அல்பர்டினா.



அல்பர்டினா சிசுலு

இனவெறி கோரத்தாண்டவமாடும் தென் ஆபிரிக்காவின் கறுப்பு இனத்தவரின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒருவரைத் திருமணம் செய்து வாழ்வது இலகுவானதல்ல என்பதை அவர் ஆரம்பத்திலிருந்து அறிந்தே இருந்தார். ஆனால் ஒரு குடும்பம் தாக்குதலுக்குள்ளாகும் போது அதுவே பெரும் பலத்தைத் தருவதும், தம்மை ஈடுபடுத்திக் கொண்டு விட்ட போராட்டத்தின் இலட்சியங்கள் மீதான விசுவாசம் உறுதிப்படுவதும் இயற்கையல்லவா? இது அன்னை அல்பர்டினாவிடம் அபரிமிதமாகவே காணப்பட்டது.

திருமணத்தின் பின்னர் தோழர் வால்டர் சிசுலு ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் (ANC) பொதுச் செயலாளரானார். அப்போது நாட்டின் நிலைமை மோசமாயிற்று. ஆபிரிக்க தேசிய கட்சி இன ஒதுக்கலை நடைமுறைப்படுத்தி வந்தது. எனவே 1950 களில் ANC பிரசாரத்திலும் போராட்டததிலும் இறங்கிற்று. அவற்றிலெல்லாம் அன்னை அல்பர்டினா பெரும் பங்கேற்றார்.

அன்னை அல்பர்டினாவுடன் தோளோடு தோள் சேர்த்து விடுதலைக்குப் போராடிய இன்னொருவர் தான் திருமதி. பின்னி மண்டேலா. இவர் சிறைப்பட்டுள்ள ANC தலைவர்சளில் ஒருவரான நெல்சன் மண்டேலாவின் துணைவியாவார். இவ்விரு பெண்களும் வாழ்நாள் முழுவதிலும் அனுபவித்த இன்னல்களின் போதெல்லாம் அவற்றை முகமலர்ச்சியுடனும் மனோதிடத்துடனுமே எதிர்கொண்டனர். அதனால் தான் தனிச்சிறப்புகளற்ற வாழ்க்கையெனும் சமுத்திரத்தில் பின்னி ஒரு மேன்மையான தீவாகத்திகழும் போது அல்பர்டினா ஜீப்ரால்டர் குன்றாகப் பிரகாசிக்கிறார் என்று குறிப்பிடுகின்றார்கள்.

திருமணமானபின் 40 வருட வாழ்வில் அன்னை அல்பர்டினா ஒரு மனைவியாகவும், தாயாகவும், போராளியாகவும் அனுபவிக்காத துயரங்களே இல்லை எனலாம். 1953க்கும் 1964க்கு மிடையில் மட்டும் இவரது கணவர் வால்டர் சிசுலுவை எட்டுத் தடவைகள் சிறையிலடைத்தார்கள்.

அதன்பின் ஜொகன்னஸ் பர்க்கிற்கருகிலுள்ள ரிவோனாவில் ஒரு வீட்டில் வைத்து மண்டேலா மற்றும் தலைவர்களுடன் இவர் கைதுசெய்யப்பட்டார். இனவெறிமிக்க வெள்ளையர் ஆட்சியை புரட்சி செய்து கவிழ்ப்பதற்கு சதித் திட்டமிடப்பட்டது எனக் குற்றஞ்சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

அதே வேளையில் அல்பர்டினா மீது வழக்குத் தொடராமல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அப்போது ஐந்து பிள்ளைகளுடன் சாப்பாட்டிற்கே வழியின்றி அவர் கஷ்டப்பட்டார். ஒரு தாதியாகப் பணியாற்றியதில் கிடைத்த ஊதியம் போதுமானதாயிருக்கவில்லை.

தடுப்புக்காவல் அகற்றப்பட்டபின் அடுத்த பதினேழு ஆண்டுகள் தடுத்துவைக்கப்பட்டார். இதில் பத்தாண்டுகள் இவர் ஒரு சிறிய இருண்ட வீட்டில் துயரங்களோடும் குழந்தைகளோடும் இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது.

இவர்களையெல்லாம் விடுவிக்கவேண்டுமென்று அமெரிக்காவில் நெருக்கடிகள் தோற்றுவிக்கப்பட்டன. தென் ஆபிரிக்கா மீது கொண்டுள்ள தனது

நெகிழ்வான கொள்கையை நியாயப்படுத்த ரீகன் நிர்வாகத்திற்கும் தேவையிருந்தது. இவ்விதத்தில் 1983-ஆம் ஆண்டு ஏனைய அறுபது பேர்களுடன் அல்பர்டினாவும் விடுவிக்கப்பட்டார்.

எனினும் அவர் விடுவிக்கப்பட்டார் என்ற ஆனந்த ஆரவாரம் அடங்குமுன்னரே ஐந்தே வாரங்களுக்குள் அல்பர்டினா மீண்டும் கைது செய்யப்பட்டார். ஒரு மரணச் சடங்கின்போது ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் பாடல்களைப் பாடினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டது. 1984 பெப்ரவரியில் இவருக்கு நான்கு வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இதில் பாதி தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் நோக்கங்களை ஊக்குவித்தற்கான தாகும். பிணையில் விடப்பட்ட அல்பர்டினா அப்பீல் செய்தார்.

### தமிழீழத்தின் வீரவனிதையர்க்கு!

***விடுதலைக்காகப் போராடி வரும் அன்னை அல்பர்டினா. ஜொகன்னஸ் பர்க்கிலுள்ள சென்ட்ரல் மெதடிஸ்ட் தேவாலய மண்டபத்தில் நடந்த தேசிய மாதர் தினக் கூட்டத்தில் பேசியதை எமது தமிழீழ வீராங்கனைகளுக்காக இங்கு பிரசுரிக்கிறோம் :***

''நாம் அனைவரும் அணிதிரண்டு கரங்களை ஒன்றிணைத்தவாறு நாட்டையே மாற்றியமைப்போம்'' என்று கூற வேண்டிய நேரம் நம் பெண்களுக்கும் வந்துள்ளது. இல்லாவிட்டால் எதிர்காலத்தில் [வெள்ளைப்] பிள்ளைகள் தமது தாய்மாரைப் பார்த்து ''கறுப்புக் குழந்தைகள் 1976-ல் குண்டு மழையால் கொல்லப் பட்டார்கள் என்பது உண்மைதானா? அப்போது அதைப் பார்த்துக்கொண்டா இருந்தீர்கள்? இத்தேசத்தின் புதல்வர்கள் ஈக்களைப் போலக் கொன்று குவிக்கப்பட்டபோது நீங்கள் சும்மா இருந்திருந்தால், உண்மையில் உங்களிடம் இதயம் என்று ஒன்றிருந்திருக்க முடியுமா?'' எனக்கேட்கும் போது அவமானத்தால் கூனிக் குறுகிப்போக நேரிடும்.

'புதிய அரசியல் யாப்பு நிறவெறி கொண்டது. இனவெறி மிக்கது. மக்கள் அணிதிரளும் போது என்ன செய்வதெனத் திகைத்து நிற்கும் அரசின் கைப்பாவையாக ஆக்கிவிடாதீர்கள் என்று எல்லாத் தாய்மாரையும் கேட்டுக் கொள்கிறேன். எதற்கு? ஆயுதம் வாங்கவும், நம் பிள்ளைகளைக் கொன்று குவிக்கவும்! அதை எதிர்த்துப் போரிடுவோம். வெல்வோம்! விடுதலையடைவோம்! ●

மீண்டும் கைது செய்யப்படலாம் என்ற நிலைமை இருப்பினும் இவர் அதைப்பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அதனால்தான் புதிதாக உருவாக்கப்பட்ட இன ஒதுக்கலுக்கெதிரான இயக்கமான ஐக்கிய ஜனநாயக முன்னணியின் (UDF) இணைத் தலைவராக இருக்கின்றார். இவ்வியக்கம் ANC-க்கு ஆதரவானதென்று அரசினால் அறிவிக்கப்படக் கூடிய ஆபத்தும் இருக்கிறது. இது எதிர்காலத்தில் அல்பர்டினாவுக்கு பெரும் இன்னல்களை ஏற்படுத்தலாம். எனினும் எல்லா UDF மேடைகளிலும் தோன்றுவதற்கு இவர் தயங்குவதில்லை.

● ''வன்முறையை அறவே கைவிட்டுவிட்டதாக அறிவித்தால்தான் மாண்டேலேயை என்னால் விடுதலை செய்ய முடியும்''

— போத்தா

● ''எம்மீது வன்முறையை திணித்ததே வெள்ளையர் ஆட்சிதான். நாங்கள் அதை கைவிட வேண்டும் என்றால் அந்தப் பந்து அவர்கள் விளையாட்டுத் திடலில்தான் இருக்கிறது.

— மாண்டலே

இவரது மூத்த புதல்வர் மெக்ஸ் இருபதாண்டுகளுக்குமுன் தென் ஆபிரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்டு எங்கோ வாழ்கிறார். நாடுகடத்தப்பட்ட மகள் லினிவி சிவாஸிலாண்டில் திருமணம் செய்து கொண்டுள்ளார். இன்னொரு மகனான, பத்திரிகையாளரான சுவெலாக்வே இரண்டாண்டுகள் பிரஷ்டம் செய்யப்பட்டதோடு 1982ல் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் தடுப்புக்காவலில் இருந்தார். 1984 ஆகஸ்டில், அன்னை அல்பர்டினாவின் ஏனைய பிள்ளைகளான முழுங்கிஸி, மடிஸா, ஜொங்கும்ஸி மூவரையும் கைது செய்தார்கள். தென் ஆபிரிக்காவின் சித்திரவதை முகாமில் அவர்களுக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை,

இன்வெறிமிக்க ஒரு மிலேச்ச அரசு புதிதாக என்னதான் செய்துவிடப்போகிறது. நாட்டையும், மக்களையும், மொழியையும் நேசிப்பவர்களை இனவெறி அரசுகள் என்ன செய்யும் என்பது நாமறிந்தது தான்.

தேசத்தினதும் மக்களினதும் விடுதலைக்காகவே போராடிப் போராடி 67 வயதும் 73 வயதும் ஆகிவிட்ட அன்னை அல்பர்டினாவும் அவரது கணவர் வால்டர் சிசுலுவும் இப்போது வாழ்க்கையின் கடைசிப்படிகளிலேயே அதிகார வெறியர்களால் பிரிக்கப்பட்டுள்ளார்கள். வயது போன இக்காலத்தில் ''இனி நாம் மீண்டும் ஒன்றாக வாழ முடியாது'' என்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள் என்பது நம் மனங்களைப் பிழியவே செய்கிறது.

அவர்கள் பிரிந்தே வாழலாம். ஆனால் தென் ஆபிரிக்க மக்களின் மனங்களிலே வாழ்கின்றார்கள். என்றும் வாழ்வார்கள். அங்கே மட்டுமல்ல உலகமெல்லாம் பரவியுள்ள விடுதலைப் போராளிகளின் மனங்களிலும், உணர்விலும், உறுதியிலும் கூட நிரந்தரமாக வாழ்வார்கள். ●

# அமெரிக்காவின் உதவி அபிவிருத்திகளுக்கல்ல அடக்குமுறையாளர்களுக்கே!

மூன்றாம் உலக நாடுகளுக்கு அமெரிக்கா அளித்துவரும் பொருளாதார உதவிகள் அமெரிக்காவில் தற்போது எழுந்துள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாகக் குறைக்கப்படும் என்று அமெரிக்கா அரசு வட்டாரங்கள் அறிவித்திருக்கின்றன. அமெரிக்காவின் உள்நாட்டுப் பொருளாதாரம் சீர்கெட்டுவருவதால் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்படும் நிதிப் பற்றாக்குறை காரணமாக வெளிநாடுகளுக்கு அளித்துவந்த உதவிகளைக் குறைத்துக் கொள்ளும் என தெரிவித்திருக்கிறார்கள்.

அமெரிக்கா நிர்வாகம் கடந்த 40 வருடங்களாக நிதிப்பற்றாக் குறையைக் கொண்டிருப்பதுடன் கடனாளியாகவும் இருக்கிறது. கடந்த நாலு ஆண்டுகளில், 1980ல் $75 பிலியன் ஆக இருந்த நிதிப்பற்றாக்குறை 1984ல் $175 பிலியன் தொகையாக அதிகரித்த பொழுது வெளிநாட்டு உதவிகளுக்கான செலவீனம் 1980ல் $5 பிலியன் தொகையிலிருந்து 1984ல் $18 பிலியன் தொகையாக அதிகரித்திருக்கிறது. ஜனாதிபதி ரீகன் 1980 ஜனாதிபதி தேர்தலில் அரசின் நிதிநெருக்கடியைப் போக்குவேன் என்று கூறி ஆட்சியைப் பிடித்தபோதிலும் அவரின் ஆட்சிக்காலத்தில்தான் நிதி நெருக்கடி பன்மடங்காக அதிகரித்திருந்தன.

> அமெரிக்கா ஒரு நாட்டிற்குப் பொருளாதார உதவிகளை வழங்கும்போது அது அந்நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடுவதாவே இருக்கின்றது. பொருளாதார உதவி வழங்க மறுக்கும்போதும் அது தலையிடுவதாகவே முடிகின்றது.
>
> — றொபட் ஜி. நியூமன்
>
> அமெரிக்க ராஜதந்திரி,
> அரசியலறிஞர்,
> நூலாசிரியர்,
> பல நாடுகளில் அமெரிக்க தூதுவராகப் பணிபுரிந்தவர்.

[தற்போது மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கும் ரீகன் நடப்பு ஆண்டில் $227 பிலியன் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டபோதிலும் அதை 1986ல் $180 பிலியன் ஆகவும் 1988ல் $144 பிலியன் ஆகவும்தான் குறைக்கப்போவதாக கூறியிருக்கிறார்.]



ஆனால் ஆயுததளபாடங்களுக்கான செலவீனத்தைக் குறைக்கமுடியாது எனவும் சோவியத் யூனியனின் படைபலதிற்குச் சமமாக ஆயுததளபாடங்களின் செலவீனங்களைக் கூட்ட வேண்டும் என்று ''பென்ரகனின்'' அறிக்கையை முழுதாக ஏற்றுக் கொண்டுள்ளது ரீகனின் அரசு, 1986ம் ஆண்டில் செலவீனம் 'பென்ரகனின்' ஏற்கனவே கணிக்கப்பட்ட $244 பிலியன் டொலரை விட மேலும் $31பிலியன் டொலர் அதிகமாகவே இருக்கும் எனக் கணக்கிட்டிருக்கிறது. எனவே செலவீனங்களைக் குறைக்க தேசிய பாதுகாப்புச் செலவீனங்களிலிருந்து குறைக்காது; சுழகநலன், சுகாதாரம், கல்வி போன்றவற்றிலேயே செலவீனங்களைக் குறைக்கமுடியும். ஆனால் அளவுக்கதிகமாக இத்துறைகளில் செலவீனங்களைக் குறைக்க நேருமானால் ரீகனின் குடியரசுக் கட்சியினரே ரீகனுக்கு எதிராகச் செயல்படும் நிலையுண்டு.

அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிகள் என்னும் போர்வையில் தனது நட்பு நாடுகளுக்கும், எதிர்ப்புரட்சியாளர்களுக்கும் மூலதனக் கடனையும் இராணுவத் தளபாடங்களையும் வழங்கிச் செலவு செய்து வருகிறது; அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிகள் எந்த ஒரு வளர்முக நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கும் பயன்படவில்லை. பயன்படப்போவதுமில்லை.

அமெரிக்கா ஏகாதிபத்தியத்துடன் நெருங்கிய உறவை வைத்துக் கொண்டு பலஸ்தீன மக்களுக்கும் அரபு நாடுகளுக்கும், எதிராகச் செயல்படுவதுடன் தமிழீழ மக்களுக்கும் எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கும் இஸ்ரேலிய சியோனிஸ்ட் நிர்வாகத்தின் பொருளாதாரம் அமெரிக்க உதவியிலேயே தங்கியிருக்கிறது. நடப்பு ஆண்டில் மாத்திரம் பணவீக்கம் 445'/. ஆக அதிகரித்துள்ள இக்கட்டான பொருளாதார நெருக்

கடியிலுள்ள இஸ்ரேலுக்கு அமெரிக்கா 1.2பிலியன் டொலர் பொருளாதார உதவியும் 1·4 பிலியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவியும் வழங்கியுள்ளது. அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் $8பிலியன் டொலரை இஸ்ரேல் அமெரிக்காவிடமிருந்து பெறவுள்ளது. எகிப்து $3பிலியன் டொலரை அமெரிக்காவிடமிருந்து பெறவுள்ளது. மேலும் சல்வடோர், கொண்டுரா, குவத்தமால போன்ற நாடுகளுக்கு இந்த ஆண்டில் $297பிலியன் டொலரை வழங்கவுள்ளது.

அமெரிக்கா ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட தமது முக்கிய தளங்கள் உள்ள ஸ்பெயின், போத்துக்கல், துருக்கி, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்குப் பெருமளவில் இராணுவத்தளவாடங்களைக் கொடுத்து வெளிநாட்டு உதவிகளுக்கான செலவீனங்கள் எனக் கணக்குக் காட்டி வருகிறது. அமெரிக்கா நிர்வாகம் பிலிப்பைன்ஸ் சர்வாதிகாரி மார்க்கோசிக்கு புரட்சியாளர்களை அடக்குவதற்கு ஏற்கனவே கொடுத்த துதவிய $45 பிலியன் டொலரை இவ்வாண்டு $100 பிலியன் டொலராக அதிகரித்திருக்கிறது. பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தான் எதிர்ப்புரட்சியாளர்களுக்கும் இவ்வாறு வெளிநாட்டு உதவிகள் என்னும் போர்வையில் உதவிகள் செய்துவருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

இந்து சமுத்திரத்தில் தனது நிலையை மேலும் ஸ்திரப்படுத்தும் விதத்தில் தமிழீழத்தில் திரிகோணமலையைத் தனது அடுத்த தளமாக அமைக்கும் திட்டத்திற்கு உறுதுணையாக இருக்கும். ஜே ஆர்.ஜெயவர்த்தனாவின் இனவாத அரசுக்கு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு 100பிலியன் டொலரை நன்கொடையாக கொடுப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மேலே குறிப்பிட்டவாறு அமெரிக்க ஏகாதிபத்தியம் பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிநாட்டு உதவிகளைக் குறைத்துக்கொள்ளுமாறு வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுக்கான அபிவிருத்தி உதவிகளையே குறைத்துக்கொள்ளும் என்பது நிச்சயம்.

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களில் ராணுவத்தினரின் உதவியோடு ஆயுதப்பயிற்சி அளிக்கப்பட்ட சிங்கள மக்களைக் குடியமர்த்தி அவர்களின் தற்காப்பிற்கு ஆயுதங்களும் வழங்குவோம் எனக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு உடனடியாக முதலில் யாழ்ப்பாணத்தில் குடியேற்றப்படும் சிங்களவர்களுக்குத் தொழில் வாய்ப்பு உண்டா என வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் கேட்டபோது அந்த மக்கள் முக்கியமாக விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தப் படுவார்கள் என்றும் ஜே. ஆர். கூறியுள்ளார்.

இத்தகைய ஜே. ஆர். இன் அத்துமீறிய இனஒழிப்பு நடவடிக்கைகளின் நோக்கங்கள் அவர் ஒரு அரசியல் தீர்வுக்கு ஆயத்தமாக இல்லை என்பது வெளிப்படுத்துகின்றது. சிறீலங்கா அரசு இத்தகைய தமது திட்டத்திற்கு எத்தகைய சாட்டுக்கள் சொன்னாலும் அரசியல் விழிப்புணர்ச்சியுள்ள சிங்கள மக்களோ உலக மக்களோ இதை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. தமிழ்மக்கள், சிங்கள மக்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்த நிலப்பகுதியையோ, அவர்களின் மொழியையோ பொருளாதார வாழ்வையோ மதம், கலாச்சாரம் போன்ற உளவியல் ரீதியான கருத்தியல் சார்ந்த எதையுமோ என்றுமே அபகரித்ததில்லை, அபரிக்கப் போவதுமில்லை. மறுபுறத்தில் சிங்கள மக்கள் வாழும் நிலப்பரப்புக்கள் வளமான பிரதேசங்களே. விவசாயத்திற்கு சகல இயற்கை வளங்களையும் கொண்டிருக்கின்றன. பிரித்தானிய காலனித்துவத்திடமிருந்து ஆட்சியை பெற்றுக்கொண்ட சிங்களத்தரகு முதலாவிதுவம் சிங்களப் பகுதியிலேயே இன்றுவரை விவசாய முன்னேற்றத்திற்காக பாரிய பல அபிவிருத்திகளை செய்து வந்திருக்கின்றது. மகாவலித் திட்டத்தில் குறிப்பாக மறுஓயாத் திட்டத்தில் பல கோடி ரூபாய்களை செலவு செய்து சிங்கள குடியேற்றத்தை விஸ்தரிக்க தமிழ் மக்களது பாரம்பரிய பிரதேசமான கிழக்கு மாகாணத்தில் மேலும் பல வழிமுறைகளை அரசு செய்து வருகிறது.

இது இவ்விதமிருக்க வரண்டதும் விவசாயத்திற்குச் சாதகமற்ற தன்மைகளைக் கொண்ட யாழ்ப்பாணப் பகுதியில் சிங்கள மக்களைக் குடியேற்ற முன்வரும் நோக்கம்தான் என்ன? நவகாலனித்துவத்திற்குட்பட்டு வெளிநாட்டு வர்த்தக நிலையங்களுக்கும், பல்தேசிய நிறுவனங்களுக்கும் கொழும்பும் அதன் புறச்சுற்றுக்களிலும் இருந்த மக்களை இடம் பெயரச் செய்ததற்கு, அவர்களை இங்கு வந்து குடியமர்த்தி விடலாமென இவ்வினவாத அரசு நம்புகின்றது. ஆனால் இத்தகைய ஆட்சியாளர்களின் சூழ்ச்சிகளுக்கு சிங்கள மக்கள் உடன்படப்போவதில்லை. ஆயினும் ஆயுதப்படையின் அக்கிரமங்களை ஊக்குவித்து தற்பொழுது மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்ந்து வந்த தமிழர்களை அகதிகள் ஆக்கிவிட்டு, அப்பிராந்தியங்களில் ஆயுதம் தரித்த சமூக விரோத குற்றவாளிகளைக் கொண்டு வந்து குடியேற்றும் முயற்சிகளும் சிறிது சிறிதாக நடந்தே வருகின்றது.

உண்மையில், தமிழ்ப் பகுதிகளை சிங்கள அரசு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அங்கு சிங்கள மக்களை குடியமர்த்தி வருவது இன்று நேற்று திகழும் சம்பவம் அல்ல. எமது விடுதலைப் போராட்டத்தை சாத்வீக முறையில் முன்னெடுத்துச் சென்ற காலங்களில் எம்மக்கள் இத்தகைய திட்டமிடப்பட்ட குடியேற்றத் திட்டங்களை எதிர்த்தே போராடி வந்திருக்கிறார்கள்.

இன்று தமது முழுமையான சுதந்திரத்திற்காக ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டு வரும் எம்மக்கள், இத்தகைய ஜே. ஆரின் இன ஒழிப்புக் கொள்கைகளுக்கு ஒரு பொழுதும் சரணாகதியடையப் போவதில்லை. மாறாக அரசியலில் விழிப்புறும் சிங்கள மக்களும் இவ் இனவெறி ஆட்சியாளர்களிற்கு ஒத்தாசையாக தமிழீழப் பகுதியில் வந்து குடியேறப் போவதில்லை. நடைமுறையில் இலங்கையில் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான ஜே. ஆரின் புதிய அணுகுமுறை சர்வதேச அரசியல் சமூகங்கள் சிங்கள இனவாத அரசை அடையாளம் கண்டு கொள்ள உதவுகின்றது. எவ்வாறு இஸ்ரேலிய சயனிஸ்டுகள், பாரம்பரிய பலஸ்தீனத்தில் இராணுவ அக்கிரமிப்பிற்குள்ளாக்கி விட்டு அத்துமீறிய குடியேற்றம் செய்து வந்தார்களோ, அதேசியோனிஸ்டுகளை ஆலோசகர்களாகக் கொண்டு, எம் அப்பாவி மக்களை கொன்று குவித்து எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கி விடலாம் என்ற ஆலோசனையையும் பெற்று இப்புதிய அணுகுமுறையில் இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு எமது மக்கள் பாடம் புகட்டி, இறைமையும், சுதந்திரமும் உள்ள தமிழீழத்தை, ஓரணியில் நின்று அமைத்திடுவார்கள் என்பது உண்மை. ஆள்படைப் பலத்தால் நிச்சயமாக எம்மை அழித்துவிட முடியாது. அகங்காரமும், ஆணவமும் கொண்ட ஜே. ஆரின் இன ஒழிப்பு அணுகுமுறை ''தனக்குத் தானே குழிதோண்டியது போல்'' ஆகும். ○

(விடுதலைப்......
1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைகளை அறிய ராணுவச் சீருடையில் இருக்கும் எதிரியின் நடவடிக்கைகளை கவனித்தால் மட்டும் போதாது சில சமயங்களில் ராணுவ வீரரின் குடும்பத்தினர்களின் நடவடிக்கைகளை அவதானிப்பதால் மிகச்சிறந்த செய்திகளைப் பெற முடியும் என்பதை இரண்டாவது உலக மகாயுத்த சமயம் பிரான்சு நாட்டில் அந்த நாட்டு விடுதலைப் போராளிகளின் மூன்று நபர்களை மட்டுமே உள்ளடக்கிய சிறு குழுவானது ஆயிரத்திற்கும் அதிகமான ஜெர்மானிய துருப்புகளை அழித்தொழித்த செயல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமையும். இந்தச் செயலானது ஒரு ஜெர்மனிய ராணுவ அதிகாரியின் மனைவி தனது தோழிக்கு தனது கணவன் அவரது வீட்டு விருந்துக்கு வரமுடியாத காரணத்தை விளக்க முற்பட்டு அது அவரது கணவனது படைப் பிரிவு எந்த நேரத்தில் எந்த ஊரில் இருந்தது என்ன வாகனத்தில் வெளியேறுகிறார் என்பது வரைக்கும் விளக்கியதைக்கேட்ட நாட்டுப் பற்று மிக்க பிரெஞ்சுப் பெண்மணியானவள் தான் கேட்ட செய்தியானது விடுதலைப் போராளிகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டிய செய்தி என்ற கடமையை உணர்ந்து பலவித இன்னல்களுக்கும் இடையில் விடுதலைப் போராளிகளுடன் தொடர்பு கொண்டு செய்தியைத் தெரிவித்த படியால்தான் விடுதலைப் போராளிகள் அந்த எதிரிகள் செல்லும் பாதையில் உள்ள பாலத்தை அவர்கள் சென்ற ரயில் வண்டி கடக்கும்பொழுது வெடி வைத்துத் தகர்த்து அழிக்கமுடிந்தது.

அதேபோல் தொடர்ந்து எதிரியைப் பற்றி குறிப்புகள் எடுக்கப்பட்டால் குறிப்பிட்ட படைப்பிரிவு எங்குள்ளது என்பதை அறிய அந்த குறிப்பிட்ட படைப் பிரிவைச் சார்ந்த ராணுவ வீரருடைய மனைவி காய்கறிக்கடையில் வழக்கத்துக்கு மாறாகக் கொள்முதல் செய்வதைக் கொண்டு கூட அறியத்தக்கதாக இருக்கும். அதே போல் எதிரி முகாம்களுக்குச் செல்லும் உணவுப் பொருட்கள் அவர்களின் எண்ணிக்கையைத் தெரியப்படுத்துவதாக இருக்கும். எதிரிகளின் கதையை உன்னிப்பாகக் கேட்ட அவர்களது எதிர்கால நடவடிக்கைகளை அறிய தக்கதாக இருக்கும். எனவே எமது தமிழீழ மக்கள் அவர்கள் எதிரியைப் பற்றி அறியும் எந்த ஒரு தகவல்களும் விடுதலைப் போராட்டத்திற்கு உதவும் என்ற ஒரு தலையாய உண்மையை உணர்ந்து அத்தகைய செய்திகளை விடுதலைப் போராளிகளுக்குத் தெரிவிப்பது தங்களது கடமையாகக் கொள்ள வேண்டும்.

(மறு பிரசுரம்)

## தமிழர் நல மருத்துவ அமைப்பு

## MEDICAL UNIT FOR SERVICE OF TAMILS

MEDICAL UNIT FOR SERVICE OF TAMILS .M.U.S.T.

தமிழீழத்தில் இன்று ஆயிரக் கணக்கான தமிழ்மக்கள் சிங்கள இனவெறி அரசின் கரங்களுக்குள் சிக்கி உயிரிழந்ததுடன் காயங்களுடன் உடமைகளை இழந்து அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்களுக்கு உதவும் முகமாகத் தமிழர் நல மருத்துவ அமைப்பு (MUST) தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்புக்குத் தமது தொழில் திறனை நல்க பல வைத்திய நிபுணர்கள் தயாராக உள்ளனர். அத்துடன் அனைத்து விடுதலை இயக்கங்களும் இவ்வமைப்புக்கு ஒத்துழைப்பைத் தந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### இவ்வமைப்பின் நோக்கங்கள்:

- தமிழீழ மக்கள் அனைவருக்கும் பொதுவான மருத்துவ அமைப்பாக இருத்தல்.
- உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் வைத்தியர், நிபுணர்களினதும் மற்றும் தமிழர்களுக்கு உதவுவதாய் இருக்கும் ஏனைய வைத்திய நிபுணர்களினதும் சீரிய பங்களிப்பையும் ஒருங்கு திரட்டித் துன்பப்படும் தமிழீழ மக்களின் தேவைக்காகப் பயன்படுத்தல்.
- உலகின் பல்வேறு பாகங்களிலும் இருந்து போசாக்கு உணவுகளைத் திரட்டித் துன்பப்படும் தமிழீழ மக்களுக்கு வழங்குதல்.
- உலகின் எல்லாப் பாகங்களிலும் இருந்து உடைகளைத் திரட்டி அவசியப்படும் தமிழீழ மக்களுக்கு விநியோகித்தல்.

இவ்வமைப்பைச் சிறப்புறச் செயற்படுத்தவேண்டியது தமிழர்கள் அனைவரதும், உலக சமாதானத்தையும் அமைதியையும் வேண்டி நிற்கும் அனைவரினதும் கடமையாகும்.

### தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

தமிழர் நல மருத்துவ அமைப்பு
144 சூளைமேடு நெடுஞ்சாலை
சென்னை-94
தென்இந்தியா.

உங்கள் கையில் தவழும் ஒவ்வொரு இதழும் சிறிலங்கா அரசாங்கத்தினதும் எதிர்ப்புரட்சியாளரினதும் கடுமையான தடைகளை மீறியே வந்து சேருகிறது. ஆகவே ஒவ்வொரு இதழையும் வீணாக்காது எல்லோருக்கும் படிக்கக் கொடுக்கவும்.

வெளியீடு: செய்தி—தொடர்புத் திணைக்களம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்.